# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C.44/22 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.2 |
| Name | : | குப்பன் |
| Father's Name | : | த.பெ.முருகன் |
| Village | : | சோலை அருகாவூர் |
| Taluk | : | சேத்பட் |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | 55 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 13.03.2026.

**எதிரி ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் அவர் பக்கத்து ஊர்காரர் ஆவார். புகார் கொடுத்த அ.சா.1 மணிமாறன் என்பவரை எனக்கு தெரியாது.

சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு தேதி ஞாபகம் இல்லை. காலை11.00 மணி அளவில் சாலையில் பேருந்துவிட்டு நடந்து கொண்டிருந்தபோது கும்பலாக இருந்தது என்னவென்று பார்த்தேன் விபத்து என்று சொன்னார்கள் நான் சென்றுவிட்டேன். விபத்தில் அடிபட்ட நபர் யார்

என்று தெரியாது. விபத்து எப்படி ஏற்பட்டது என்றும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை.

அரசு தரப்பில் சாட்சியை அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத காரணத்தால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதியுடன் குறுக்கு விசாரணை.

சாட்சியை வடவணக்கம்பாடி காவல் நிலைய தலைமை காவலர் தாமோதிரன் அடையாளம் காட்டி ஆஜர்படுத்தினார். சாட்சியின் ஆதார அடையாள அட்டை சரிபார்க்கப்பட்டது.

கடந்த 29.09.2020ம் தேதி காலை 10.00 மணிக்கு ஆலியூர் மடம் ரோட்டில் டி.வி.எஸ்.எக்ஸ்.எல் டி.என்.25டி.7031 என்ற இருசக்கர வாகனம் சென்று கொண்டிருந்தபோது ஏந்தல் கூட்டுரோடு நோக்கி வந்த டி.என்.23 சி.ஒய் 2169 என்கிற டிரேக்டர் மோதி விபத்து ஏற்படுத்திய சம்பவத்தை நான நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி எனது பக்கத்து ஊர்காரர் என்பதாலும் எனக்கு தெரிந்தவர் என்பதாலும் அவரை காப்பாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால்சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

இல்லை.

// உண்மை நகல் //

Taken down by me in Open Court, Read over to the witness and Admitted by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.